நகரமன்றம் குடியாத்தம் நாள் : 08.06.2018

# அறிவிப்பு

2018–ம் ஆண்டு ஜுன் மாதம் 8–ம் தேதி வியாழக்கிழமை முற்பகல் 12.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.ச.செல்வபாலாஜி, பி.இ., தனி அலுவலர்**

## நிகழ்ச்சி நிரல்

1. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தொழில்வரி 1920-ம் வருட தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் எண்.59/1998-ன் பிரிவு 124படி உட்பிரிவு 14 துணைப்பிரிவு (2)-ன்படி ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை திருத்தம் செய்யப்பட வேண்டும். மேற்படி தொழில்வரி திருத்தம் குறைந்தபட்சம் 25%-க்கு குறைவாகாமலும் அதிகபட்சம் 35% மிகாமலும் உயர்த்த வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, 01.10.2018 முதல் தொழில்வரி சதவீதத்தினை உயர்த்த மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** தொழில்வரி குறைந்தபட்சம் 25% உயர்த்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.9326/2008/அ5)

2. இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் எண். TN23CZ3137 Scorpio பழுதடைந்து இயங்காமல் உள்ளதை Jain Cars & Auto Sales (P) Ltd., வேலூர் நிறுவனம் மூலம் சரிசெய்வதற்கு ஆகும் செலவினதொகை ரூ.70,000/-ஐ மேற்காணும் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தின் முன் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று முன்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்:** இ1/399/2017

3. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு உள்ளி மற்றும் எர்த்தாங்கல் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio- Mining முறையில் அப்புறப்படுத்த அவ்விடத்தில் உள்ள குப்பைகளை அளவீடு செய்ய தகுந்த நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | Gridline Surveys and Geospatial Pvt.Ltd., Chennai | Orientsurveys, Chennai | M/s. JP Surveys & Consultants, Chennai |
|---|---|---|---|---|
| 1 | குடியாத்தம் நகராட்சி - திடக்கழிவு மேலாண்மை – Bio-Mining உரக்கிடங்கு குப்பைகள் அளவீடு செய்தல் | 50000.00 | 55000.00 | 58000.00 |
| **மொத்தம்** | | **50000.00** | **55000.00** | **58000.00** |

**அலுவலககுறிப்பு:-**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **Gridline Surveys and Geospatial Pvt.Ltd., Chennai** நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி தொகையாக ரூ.50,000/- ஒதுக்கீடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. வரவு செலவு திட்டம் 2018-19-ன் கீழ் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/581/2016

4. இந்நகராட்சியில் 2017 - 2018 ஆம் ஆண்டு **பொது நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 23.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | குடியாத்தம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு 125KVA Genset கொள்முதல் செய்யும் பணி மதிப்பீட்டு தொகை ரூ.8,50,000/- | 1. Ashok Leyland – 0.00% மதிப்பீட்டு விகிதம்<br>2. Sri TNA Generator and Service – 0.09% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | குடியாத்தம் நகராட்சி அலுவலகத்தில் 125KVA Genset பொருத்தி மேற்கூரை அமைக்கும் பணி மதிப்பீட்டு தொகை ரூ.3,25,000/- | 1. J.J.Anandakumar – 0.00% மதிப்பீட்டு விகிதம்<br>2. DCN Construction – 0.30% மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>:-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு விகிதம் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்:-** இ1/399/2017

5. இந்நகராட்சியில் பல்வேறு அடிப்படை வசதிகள் செய்வதற்கு கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு அதற்கான நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்:36 ஆணையர் குடியிருப்பில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 5.50 |
| 2 | வார்டு எண்:20 அண்ணா தெருவில் உள்ள நகராட்சி வணிகவளாக கடைகள் மேற்பகுதியில் கழிவறை வசதி செய்தல் | 2.00 |
| 3 | வார்டு எண்:15 ஓம்சக்தி தெரு மற்றும் வார்டு எண்:17 பீமராஜ் முதலி தெரு மற்றும் ஆரணி நன்னுமியான் தெரு சந்திப்பில் சிறுபாலம் அமைத்தல் (ஜண்டா அருகில்) | 2.20 |
| 4 | வார்டு எண்.24 கோபலாபுரம் மேநீர் தேக்க தொட்டி வளாகத்தில் சுற்றுசுவர் அமைத்து பராமரிப்பு பணி செய்தல் | 3.75 |
| 5 | நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் ஆணையர் அறை,பொறியாளர் அறை மற்றும் மேலாளர் அறையில் குளிரூட்டும் சாதனம்(Air Conditioner) பொருத்தி இயக்குதல் | 2.00 |

**<u>அலுவலக குறிப்பு</u>:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரவு செலவு திட்டம் 2018 -19-ன் கீழ் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **ந.க.எண்:** இ1/399/2017

6. இந்நகராட்சியில் வேலூர் மாவட்ட பிரசித்திபெற்ற பநீகங்கையம்மன் சிரசு திருவிழா மே-2018-ல் நடைபெற்றதற்கு இந்நகராட்சி சார்பில் பெதுமக்களை வரவேற்கும் வண்ணம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு வரப்பெற்ற செலவின தொகை ரூ.1,48,470/-ஐ கீழ்க்காணும் விளம்பர நிறுவனங்களுக்கு வழங்க மன்றம அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

1. எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன் - ரூ.23,100
2. தினத்தந்தி - ரூ.23,100
3. மாலை மலர் - ரூ.10,500
4. தினமலர் - ரூ.26,460
5. தினகரன் - ரூ.24,360
6. மாலை தமிழகம் - ரூ.12,600
7. மாலை முரசு - ரூ.13,650
8. தமிழ்முரசு - <u>ரூ.14,700</u>

**மொத்தம் - <u>ரூ.1,48,470</u>**

**அலுவலகக்குறிப்பு:-**

1. செலவினத் தொகைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:** இ1/399/2017

7. இந்நகராட்சி பழைய கட்டிடத்தில் பராமரிப்பின்றிருந்த A.C.1.5Tonne Capacity கொண்டதினை சர்வீஸ் செய்து 1. ஆணையாளர் அலுவலக அறைக்கும், 2. மேலாளர் அலுவலக அறைக்கும் பொருத்தி பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் மேலும் ஆணையாளர் குடியிருப்பில் பழுதடைந்துள்ள மின்விசிறிகளை மாற்றியமைக்கும் பணியின் அவசியம் கருதி அதற்குண்டான பணிகளை செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளியின் விவரம் வருமாறு

1. திரு.டி.டி.ராமகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் குடியாத்தம் - ரூ.35,500
2. திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார், ஒப்பந்ததாரர் குடியாத்தம் - ரூ.37,900
3. சுரேஷ் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர், குடியாத்தம் - ரூ.38,300

வரிசை எண்.1-ல் குறிப்பிட்டுள்ள திரு.டி.டி.ராமகிருஷ்ணன் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரரின் குறைவான விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கி ஒப்படைப்பு பணியாக செய்து முடித்ததினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்:** இ1/399/2017

8. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் இருந்து வந்த UPS-யின் 12Volt 200AH திறன் கொண்ட பேட்டரியை பொருத்தி சுமார் 5 வருடங்களுக்கு மேல் ஆனதால் அதனுடைய மின்சேகரிப்புத் திறன் குறைந்து மேற்படி UPS இயக்க முடியாத நிலையில் உள்ளது. இதனால் பிறப்பு, இறப்பு சான்றுகள், IHHL பணி மேலும் சுகாதாரப்பிரிவு சம்மந்தப்பட்ட பணிகள் மின்சாரம் இல்லாத நேரங்களில் பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே மேற்படி பேட்டரி 12Volts 200AH பேட்டரியை புதியதாக வாங்கிப் பொருத்திட விலைப்புள்ளி பெறப்பட்டதில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய

1.M/s.அம்பிகா பேட்டரிஸ், அம்பாபுரம், குடியாத்தம் 1எண். - ரூ.18,000
2.M/s.வெங்கடேஸ்வரா பேட்டரிஸ், காட்பாடிரோடு,குடியாத்தம் 1எண் - ரூ.18,500
3.M/s.பாலாஜி பேட்டரிஸ், காட்பாடி ரோடு, குடியாத்தம் 1எண் - ரூ.19,000

வரிசை எண்.1 குறிப்பிட்டுள்ள நிறுவனத்தில் அதில் குறிப்பிட்ட விலைக்கு வாங்கி பொருத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்:** இ1/399/2017

9. இந்நகராட்சியில் பொறியர் பிரிவில் செயல்பட்டு வரும் 3.6KVA Microteck UPS-d; Panel Circuit Board பழுதாகி எரிந்து விட்டதால் அதை அகற்றி விட்டு புதியதாக 3.6KVA, 48V Panel Circuit board மாற்றியதற்கான செலவீனம் ரூ.3,550/-ஐ Mircotek International (p) Ltd கம்பெனிக்கு தொகை வழங்க நிர்வாக அனுமதிக்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:** இ1/399/2017

10. இந்நகராட்சிக்கு தேவைப்படும் கணினி உபகரணங்கள் மற்றும் பிரிண்டர் சப்ளை செய்ய ஆகும் செலவின தொகை ரூ.19,200/-க்கு தகுந்த நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம் மற்றும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | அளவு | PSR Systems | Sivam Infotech | Jaiganesh Computers |
|---|---|---|---|---|---|
| 1. | Combo Key Board & Mouse (HP) – 8Nos | 8 | 8800.00 | 10400.00 | 10000.00 |
| 2. | TVS Dot Matrix 80col Printer-1No | 1 | 10400.00 | 11000.00 | 11600.00 |
| | **மொத்தம்** | | **19200.00** | **21400.00** | **21600.00** |

**அலுவலககுறிப்பு:-**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **PSR Systems, Gudiyattam** நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று முன்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் **ந.க.எண்:-** இ1/399/2017

11. இந்நகராட்சி பசுமாத்தூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கி வரும் 100 HP பிரதான மின்மோட்டாரின் Pumping Main 14" PSC Pipe ஆனது பாலாற்றின் கரையோரம் பள்ளிகொண்டா மேம்பாலம் அருகில் 25.05.18 அன்று இரண்டு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு நகரின் நேரடி குடிநீர் விநியோகம் வார்டு எண்.14 மற்றும் 15-ல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை சரிசெய்ய உடைந்த 14" PSC Pipe எடுத்துவிட்டு புதியதாக 12" DI Pipe வாங்கி பொருத்திடவும் மற்றும் ஐதர்புரத்திலுள்ள நகராட்சி கிணறு எண்.6 மற்றும் 8-ன் 6" AC Pumping Pipe உடைப்பு ஏற்பட்டு மேற்படி பிரதான 100எச்.பி மின்மோட்டார் தொடர்ந்து இயக்க முடியாத நிலையுள்ளது. நகரின் பொதுமக்களின் நேரடி குடிநீர் விநியோகத்தின் அவசியம் கருதி மேற்படி நான்கு உடைப்புகளை உடனடியாக சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டி தமிழ்நாடு நகராட்சிகளின் அவசர சட்டம் 1920-ம் ஆண்டு பிரிவு எண்.15-ன் கீழ் மேற்படி பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரரான திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி மேற்படி பணியினை செய்து முடிந்து பொது மக்களுக்கு நேரடி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டதிற்கான தொகை ரூ.59,762/- செலவு செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>:-** மன்றம் பதிவு செய்யலாம் **ந.க.எண்:-** இ1/399/2017

12. இந்நகராட்சி வார்டு எண்.1 முதல் 36 வரை இனிவரும் காலங்களில் தினசரி குடிநீர் விநியோகம் வழங்கிட வேண்டுமென தமிழ்நாடு நகராட்சி ஆணையாளர் சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட நாள்: 11.05.18-ல் தெரிவிக்கப்பட்டது. மற்றும் நகராட்சிகளின் மண்டல இயக்குனர் வேலூர் ஆய்வு கூட்ட நாள்: 18.05.18-ல் அதற்கான விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்து உடன் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டதினையெடுத்து அதற்கான திட்ட அறிக்கை தயாரிக்க செயல் வடிவ வரைப்படம் Auto CAD மூலம் 12 எண்ணிக்கை தயார் செய்யவும் மற்றும் இராபின்சன் குளக்கரை சுற்றியுள்ள சாலைகளில் அமைந்துள்ள நகராட்சி கடைகள், தனியார் கடைகள், வீடுகள் மற்றும் பொது நிறுவனங்களின் மேல் தளத்திலிருந்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பைப்லைன் மூலம் இராபின்சன் குளத்திற்கு கொண்டு செல்ல விரிவான வரைப்படம் Auto CAD மூலம் 6 எண்ணிக்கை ஆக மொத்தம் - 18 எண்ணிக்கை வரைப்படம் A3 Paper தயாரிக்க உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் விவரம் வருமாறு

| வ.எண். | பெயர்/முகவரி | விலைப்புள்ளி தொகை விவரம் |
|---|---|---|
| 1 | திரு.S.V.Jayakanth<br>J.J.Printer<br>எண்.68/30 அண்ணா தெரு, குடியாத்தம் | ரூ.14,760/- |
| 2 | திரு.கா.வினாயகம்<br>ஹேம் டிஜிட்டல் பிரேமிங்<br>பாண்டியன் நகர், குடியாத்தம் | ரூ.14,870/- |
| 3 | திரு.கோபி<br>சூப்பர் டிஜிட்டல் பேனர்<br>தங்கம் நகர், குடியாத்தம் | ரூ.14,950/- |

வரபெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் குறிப்பிட்டுள்ள குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.S.V.Jayakanth அவர்களுக்கு பணியின் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கி செய்து முடித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.செலவின தொகைக்கு ஒப்புதல் வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/399/2017

13. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர் கட்டண (SWM USER CHARGES) கணக்குத் தலைப்பிலிந்து முதற்கட்டமாக பொது சுகாதார அவசியம் கருதி, "தூய்மை இந்தியா திட்டத்தின் முக்கிய அம்சமான திடக்கழிவு மேலாண்மையின் ஒரு பகுதியாக (Door to Door Collector) வீடுகள் தோறும் சென்று திடக்கழிவுகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தரம்பிரித்து வாங்கும் பொருட்டு, சேகரமாகும் முதல்நிலை குப்பைகளை சேகரிக்க ஏதுவாக பேட்டரியினால் இயங்கும் மூன்று சக்கர மிதிவண்டிகள்-2எண்ணிக்கை வாங்க ஆகும் செலவினம் ரூ.3.60 இலட்சத்திற்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>:-**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.திடக்கழிவு மேலாண்மை உபயோகிப்பாளர் கட்டண நிதியில் இருந்து பணி மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/399/2017

**14.** இந்நகராட்சி ஆர்.எஸ்.ரோடு, குடியாத்தம் கதவு எண்.**53.A**, 53A-1, 53/B-ல் அமைந்துள்ள கென்னடி Industrial School சொத்திற்கு புதியதாக வரி உயர்வு செய்ததை எதிர்த்து திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு W.P.No.6832/2018 தொடர்ந்துள்ளனர். மேற்படி, வழக்கினை நகராட்சி சார்பில் வழக்காட திருமதி.தங்கவதனா பாலகிருஷ்ணன் வழக்கறிஞரிடம் ஒப்படைக்கவும், மேற்படி வழக்கினை நடத்துவதற்கு உண்டான வழக்கு கட்டணத் தொகை ரூ.**15,000/–** வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழக்கினை ஒப்படைத்ததையும், தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0675/2018/அ2)

**15.** இந்நகராட்சியில் செயல்படும் அம்மா உணவகத்திற்கு **2018–19** ஆண்டிற்கு செலவினங்கள் மேற்கொள்ள தோராய செலவு ரூ.**25.00** இலட்சம் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** அனுமதிக்கலாம் (ந.க.எண்.4141/2014/சி2)

16. இந்நகராட்சி குடிநீர் இணைப்பு பதிவேட்டில் கீழ்க்காணும் குடிநீர் இணைப்பு கேட்புகள் ஒரே முகவரியில் தவறுதாலாக இரு கேட்பு எண்கள் உள்ளடக்கி வருகிறது. இதனால் குடிநீர் கட்டணம் வசூல் செய்வதில் சிரமம் ஏற்படுவதாலும், மேலும் கேட்பில் வசூல் செய்ய இயலாத சூழ்நிலை ஏற்படுவதால் உரிய அலுவலர்களிடம் அறிக்கை பெற்றதன் பேரில் பின்வரும் Double Assessment கேட்பினை இரத்து செய்து கேட்பினை சரிசெய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பெயர் | கதவு எண் | தெருவின் பெயர் | தற்போது வசூல் செய்யப்படும் கேட்பு எண் | தவறுதலாக விதிக்கப்பட்ட இரத்து செய்யப்பட வேண்டிய கேட்பு எண் |
|---|---|---|---|---|---|
| 1. | அகிலாண்டம்மாள் | 15 | கங்காதாரசுவாமி மடம் தெரு | 5174 | 4040 |
| 2. | நாகம்மாள் | 32 | பாரதியார் தெரு | 5099 | 5102 |
| 3. | உண்ணாமலை | 30 | பாரதியார் தெரு | 5098 | 5103 |
| 4. | சுதா தேவி | 21 | கெளதம் பேட்டை | 7013 | 7034 |
| 5. | நாராயணசாமி | 67 | தரணம்பேட்டை பிள்ளையார் கோவில் தெரு | 8091 | 8208 |
| 6. | லட்சுமி | 8 | தங்கள ராமசாமி தெரு | 8199 | 8236 |
| 7. | ராஜம்மாள் | 3 | ஆணைகட்டி கணபதி தெரு | 11177 | 11014 |
| 8. | PWD | | ஆர்.எஸ்.ரோடு, கொண்டசமுத்திரம் | 14066 | 14127 |
| 9. | சுப்பையா | 18/32 | NGO காலனி | 12044 | 14204 |
| 10. | ஈஸ்வரன் | 26 | புதுப்பேட்டை பிள்ளையார் கோவில் தெரு | 19229 | 19120 |
| 11. | PWD | | ஆர்.எஸ்.ரோடு, கொண்டசமுத்திரம் | 14066 | 14106 |
| 12. | நடராஜன் | 37 | காங்கிரஸ் அவுஸ் ரோடு | 17008 | 17103 |
| 13. | நடராஜன் | 2 | காங்கிரஸ் அவுஸ் ரோடு 1வது சந்து | 17132 | 17164 |
| 14. | இராமசாமி | 35 | காங்கிரஸ் அவுஸ் ரோடு | 17104 | 17194 |
| 15. | சிவானந்தம் | 2 | இராஜா தெரு | 17207 | 17131 |
| 16. | புஷ்பா | 24 | அண்ணா தெரு | 20128 | 20207 |
| 17. | கண்ணன் | 41 | கொச அண்ணாமலை தெரு | 20084 | 20209 |
| 18. | மார்கபந்து | 29/7 | தாடி அருணாச்சலம் தெரு | 20243 | 20259 |
| 19. | கிருஷ்ணசாமி | 66 | கொச அண்ணாமலை தெரு | 20110 | 20258 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20. | அருணாசலம் | 33 | வ.உ.சி.தெரு | 21123 | 21180 |
| 21. | T.A.சவுக்அலி | 10A | வீர சிவாஜி தெரு | 22250 | 22261 |
| 22. | V.பாலாஜி | 19 | கிங்கிணி அம்மன் கோவில் தெரு | 22227 | 22260 |
| 23. | வேணுகோபால் | 27 | ஜவஹர்லால் தெரு | 22125 | 22268 |
| 24. | வள்ளியம்மாள் | 21A | இராஜேந்திரசிங் தெரு | 23095 | 23171 |
| 25. | கோபால் | 15 | இராஜேந்திரசிங் தெரு | 23148 | 23172 |
| 26. | அப்துல்மஜித் | 6/B | கோபலாபுரம் மஜித்தெரு | 24078 | 24162 |
| 27. | மோதின் | 11 | கந்தப்பன் தெரு | 24161 | 24138 |
| 28. | கந்தசாமி | 15A | குள்ளப்பன் தெரு | 24046 | 24164 |
| 29. | குயிலன் | 15/1 | கந்தப்பன் தெரு | 24069 | 24165 |
| 30. | ருக்குமணி அம்மாள் | 25 | பாரதியார் தெரு 1வது தெரு | 3152 | 5127 |
| 31. | K.இராஜேந்திரன் | 91 | திருவள்ளுவர் நகர் | 3116 | 3064 |
| 32. | V.ஜெயராமன் | 106 | திருவள்ளுவர் நகர் | 3221 | 3256 |
| 33. | R.M.நூர்பாபு | 5 | ஆரணி நன்னுமியான் தெரு | 6151 | 1092 |

**அலுவலககுறிப்பு:-** தவறுதலாக விதிக்கப்பட்ட கேட்பினை இரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்:-** இ2/8816/2008.

17. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி TN23 BQ 2792-க்கு தகுதி சான்று பெறும் பொருட்டு தமிழக அரசு உத்திரவுபடி வேக கட்டுபாடு கருவி பொருத்த வேண்டும் என வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளபடி, மேற்படி வாகனத்திற்கு புதியதாக வேக கட்டுபாடு கருவி Sankar Arts Computer Stickers என்ற நிறுவனம் மூலம் கொள்முதல் செய்ய ஆகும் தொகை ரூ.5200/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.48/2016/எச்1)

18. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 91558 மக்கள்தொகை மற்றும் இந்நகருக்கு வந்து செல்லும் மக்கள் (Floating Population) தொகையால் இந்நகரில் தினமும் சுமார் 25 மெட்ரிக் டன் அளவிற்கு திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகள் தற்பொழுது உள்ளி உரக்கிடங்கில் ( சுமார் 9.61 ஏக்கர்) கொட்டப்பட்டுவருகிறது. தற்பொழுது நகராட்சியில் உள்ள 65 மூன்று சக்கர வண்டிகள் மூலம் சுமார் 60% வீடுகளில் திடக்கழிவுகள் மக்கும் மக்காத குப்பைகள் எனப்பிரித்து வாங்கப்படுகிறது. நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய சுமார் 4 மெட்ரிக் டன் (15விழுக்காடு) திடக்கழிவுகளான பிளாஸ்டிக், ரப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள், துணிகள், தேங்காய் ஓடுகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றினை கையாளுவதிலும் மேலும் அப்புறப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இவற்றினை பாதுகாப்பாக கையாண்டு வெளியேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 11.05.2018 அன்று நடைபெற்ற ஆய்வுகூட்டத்தில் ஆலோசித்தபோது மேற்கண்ட எரியக்கூடிய தன்மை வாய்ந்த திடக்கழிவுகளை கடலூர் மாவட்டத்தில் உள்ள 5 நகராட்சிகளும் ( கடலூர், பண்ருட்டி, நெல்லிக்குப்பம், சிதம்பரம் மற்றும் விருத்தாச்சலம் ) அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் எரிபொருளாக பயன்படுத்துவதற்காக வழங்குவதால் அந்நிறுவனத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம் எனத்தெரிவித்ததை தொடர்ந்து மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு பேசியபோது நாளொன்றுக்கு 250 மெட்ரிக் டன் எரியக்கூடிய திடக்கழிவுகளை கையாளக்கூடிய அளவில் தங்களிடம் திறன் இருப்பதாகவும் இதுசம்பந்தமாக அந்நிறுவனத்துடன் 10 ஆண்டுகாலத்திற்கு எரியக்கூடிய திடக்கழிவுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட நகராட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டால் திடக்கழிவுகளை நகராட்சியின் செலவில் நகராட்சி வாகனங்களில் ஏற்றி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலையில் வந்து தர வேண்டும் எனவும் மேற்கண்ட எரியக்கூடிய திடக்கழிவுகளை நகராட்சி இலவசமாக தரவேண்டும் எனவும் நிபந்தனை தெரிவித்தனர். இதுசம்பந்தமான மாதிரி புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையும் கொடுத்துள்ளனர்.

குடியாத்தம் நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய 4 மெ.டன் திடக்கழிவுளை கையாளுவதும் அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் பல்வேறு சிரமங்கள் உள்ளன. எனவே, அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றிட மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிறுவனத்துடன் 10 ஆண்டுகாலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளவும் அதற்காக விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி சொந்த பொறுப்பில் இந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. குடியாத்தம் நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் எரியக்கூடிய தன்மையுள்ள திடக்கழிவுகளைக் கையாளுவதிலும் மற்றும் பாதுகாப்பாக வெளியேற்றுவதிலும் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு விலையேதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை நகராட்சி வாகனத்தில் கொண்டு சென்று வழங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.
2. பத்தாண்டு காலத்திற்கு அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு திடக்கழிவுகளை வழங்குவதற்கு அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2050 / 2015 /எச்1 நாள் 08.06.2018

**ஆணையாளர் / தனி அலுவலர்,**
**குடியாத்தம் நகராட்சி.**